ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2042/11 - 2017 ඔක්තෝබර් මස 24 වැනි අඟහරුවාදා - 2017.10.24
*2042/11 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2016/எச்டபிள்யு/28.
எனது குறிப்பு இல.: ஜா/2/5/5/1.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவில், ராகம் பத்துவை சிறு பிரிவில், இல. 194, டன்துகம கிராம அலுவலர் பிரிவில் உள்ள, டன்துகம கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை அதிபதி சார்பாக கம்பஹா சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட 26.04.2017 ஆந் திகதிய ஆரம்ப வரைபட இல. கம். 4050 இல் துண்டு இல. 01 இல் விபரிக்கப்பட்டுள்ள சுமார் 0.0092 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய ஒரு (01) காணித் துண்டின் மேலதிக விபரங்கள் பின்வருமாறு:

*01.* **துண்டு இல. 01**

காணியின் பெயர் : தொலேவத்தை ; விபரம் : திறந்த தரிசு நிலம் ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : டபிள்யு. எஸ். எம். எஸ். பெர்னாண்டோ, இல. 72, விஜயா வீதி, துடெல்ல, ஜா-எல; விஸ்தீரணம்: 0.0092 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி மு. ப. 9.30 மணிக்கு ஜா-எல பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஈ. எம். எஸ். பீ. ஜயசுந்தர,
பிரதேச செயலாளர்,
ஜா-எல.

பிரதேச செயலகம்,
ஜா-எல,
2017, ஒற்றோபர் 23.

*11 - 434*